DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.125/2025

PW - 8

| | | |
|---|---|---|
| Name | : | தமிழ்குமரன் (Lw - 9) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 23.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், குமராபாளையம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024 முதல் 2026 ம் ஆண்டு வரை சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

கடந்த 18.10.2024ம் தேதி மாலை 18.30 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் முன்னதாக 08.10.2024ம் தேதி சுகன்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது எண். 398/2024 ன் கீழான மனு ரசீதின் பேரில் நிலைய குற்ற எண் 230/2024 BNS சட்டப்பிரிவுகள் 329(4), 78(2) உ/இ 4 of TNPHW ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகல் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா அவர்களின் புலன் விசாரணக்காக பார்வைக்கு வைக்கப்பட்டது.

மேற்படி வழக்கினை காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 19.10.2024ம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவ இடமான சேந்தமங்கலம் கனரா வங்கிக்கு சென்று சாட்சிகள் சதிஷ், சாந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தார். பின்பு சாட்சிகள் சுகன்யா, கௌதம், மனோஜ்குமார், வினோத், சதிஷ் மற்றும் சாந்தகுமார் ஆகீயோரை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் கைது நடவடிக்கை தேவையில்லை என்பதால் எதிரி சேகருக்கு BNSS பிரிவு 35(3) ன் கீழ் விசாரணைக்கு ஆஜராகுமாறு அறிவிப்பு வழங்கினார். பின்பு வழக்கினை மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

நான் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.வில்பரைட் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா ஆகியோரை விசாரித்து தனித்னியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக எதிரி மீது BNS சட்டப்பிரிவுகள் 329(4), 78(2) உ/இ 4 of TNPHW-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.வில்பரைட் என்பவரை விசாரித்தபோது அவர் புகார் பெற்றதற்கு பின்னிட்டு காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்காக காரணத்தை எனது விசாரணையின்போது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரி எந்த எந்த தேதிகளில் எந்த வகையில் வாதியை தொந்தரவு செய்தார் என சாட்சிகள் யாரும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி வாதியின் கேபினுக்குள் நுழையவில்லை என்றாலும், நுழைய முற்பட்டார் என்று மட்டுமே சாட்சிகள் கூறியுள்ளார்கள் என்றாலும் சரிதான். நான் இவ்வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் முறையான உட்கூறுகள் எடுத்துரைக்கப்படாமல் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**